ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ காசையாடை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ காசையாடை ‖

## திருவெவ்வுளூர்

‡காசை ஆடை மூடி ஓடிக்⋆ காதல் செய் தானவன் ஊர்⋆
நாசம் ஆக நம்ப வல்ல⋆ நம்பி நம் பெருமான்⋆
வேயினன்ன தோள் மடவார்⋆ வெண்ணெய் உண்டான் இவனென்று⋆
ஏச நின்ற எம் பெருமான்⋆ எவ்வுள் கிடந்தானே (1)

தையலாள் மேல் காதல் செய்த⋆ தானவன் வாள் அரக்கன்⋆
பொய் இலாத பொன் முடிகள்⋆ ஒன்பதோடொன்றும்⋆ அன்று
செய்த வெம் போர் தன்னில்⋆ அங்கோர் செஞ்சரத்தால் உருள⋆
எய்த எந்தை எம் பெருமான்⋆ எவ்வுள் கிடந்தானே (2)

முன் ஓர் தூது⋆ வானரத்தின் வாயில் மொழிந்து⋆ அரக்கன்
மன் ஊர் தன்னை⋆ வாளியினால் மாள முனிந்து⋆ அவனே
பின் ஓர் தூது⋆ ஆகி மன்னர்க்காகிப் பெரு நிலத்தார்⋆
இன்னார் தூதன் என நின்றான்⋆ எவ்வுள் கிடந்தானே (3)

பந்தணைந்த மெல் விரலாள்⋆ பாவை தன் காரணத்தால்⋆
வெந் திறலேறேழும்⋆ வென்ற வேந்தன் விரி புகழ் சேர்⋆
நந்தன் மைந்தன் ஆக ஆகும்⋆ நம்பி நம் பெருமான்⋆
எந்தை தந்தை தம் பெருமான்⋆ எவ்வுள் கிடந்தானே (4)

பாலனாகி ஞாலம் ஏழும் உண்டு⋆ பண்டால் இலைமேல்⋆
சால நாளும் பள்ளி கொள்ளும்⋆ தாமரைக் கண்ணன் எண்ணில்⋆
நீலமார் வண்டுண்டு வாழும்⋆ நெய்தலந் தண் கழனி⋆
ஏல நாறும் பைம் புறவில்⋆ எவ்வுள் கிடந்தானே (5)

சோத்த நம்பி என்று⋆ தொண்டர் மிண்டித் தொடர்ந்தழைக்கும்⋆
ஆத்த நம்பி செங்கணம்பி⋆ ஆகிலும் தேவர்க்கெல்லாம்⋆
மூத்த நம்பி முக்கணம்பி என்று⋆ முனிவர் தொழு-
தேத்தும்⋆ நம்பி எம் பெருமான்⋆ எவ்வுள் கிடந்தானே (6)

www.prapatti.com

திங்கள் அப்பு வான் எரி கால் ஆகி⋆ திசை முகனார்⋆
தங்கள் அப்பன் சாமி அப்பன்⋆ பாகத்திருந்த⋆ வண்டுண்
தொங்கல் அப்பு நீள் முடியான்⋆ சூழ் கழல் சூட நின்ற⋆
எங்கள் அப்பன் எம் பெருமான்⋆ எவ்வுள் கிடந்தானே (7)

முனிவன் மூர்த்தி மூவர் ஆகி⋆ வேதம் விரித்துரைத்த
புனிதன்⋆ பூவை வண்ணன் அண்ணல்⋆ புண்ணியன் விண்ணவர் கோன்⋆
தனியன் சேயன் தான் ஒருவன் ஆகிலும்⋆ தன் அடியார்க்-
கினியன்⋆ எந்தை எம் பெருமான்⋆ எவ்வுள் கிடந்தானே (8)

பந்திருக்கும் மெல் விரலாள்⋆ பாவை பனி மலராள்⋆
வந்திருக்கும் மார்வன்⋆ நீல மேனி மணி வண்ணன்⋆
அந்தரத்தில் வாழும்⋆ வானோர் நாயகனாய் அமைந்த⋆
இந்திரற்கும் தம் பெருமான்⋆ எவ்வுள் கிடந்தானே (9)

‡இண்டை கொண்டு தொண்டர் ஏத்த⋆ எவ்வுள் கிடந்தானை⋆
வண்டு பாடும் பைம் புறவில்⋆ மங்கையர் கோன் கலியன்⋆
கொண்ட சீரால் தண் தமிழ் செய் மாலை⋆ ஈர் ஐந்தும் வல்லார்⋆
அண்டம் ஆள்வதாணை⋆ அன்றேல் ஆள்வர் அமர் உலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com